சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.6வது** சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | வடிவேல் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி குடியிருந்து பழைய பேப்பர் வியாபாரம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் நீதிமன்றத்தில் கேட்டவாறு 07.02.2008உயில் மற்றும் 30.09.2013 தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி 07.05.2008ம் தேதியிட்ட உயில் சாசனத்தின் அசல் பி.வா.சா.ஆ. 30. (மேற்படி உயிலில் கண்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்யும் பட்சத்திலேயே மேற்படி உயிலின் சான்றியல் மதிப்பு குறித்து விவாதிக்க இயலும்), 30.09.2013ம் தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.31.

குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் வாதி எனது சகோதரி ஆவார். மேற்படி வழக்கில் நான் இவ்வழக்கில் ஆறாவது பிரதிவாதி. வாதி இவ்வழக்கு தாக்கல் செய்ததில் எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். நான் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். இதே சொத்து சம்பந்தமாக இந்த வழக்கிற்கு முன்னர் வாதி பாகப்பிரிவினை கோரி அவரது தாயாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த சங்கதி தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பொது குடும்ப சொத்துக்கள் என்றால் இல்லை, அது எனது அம்மாவின் சுய சம்பாத்திய சொத்தாகும். பட்டன் செட்டியார் என்பவர் எனது தாத்தா. 1974ம் ஆண்டில் பொது குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை நடைபெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்களது குடும்பத்திற்கு பூர்விக பொது குடும்ப சொத்துக்கள் பொருந்தலூர் கிராமம் தெலுங்கபட்டியில் உள்ளதா என்றால் வீடு உள்ளது. விவசாய நிலங்கள் இருந்து விற்கப்பட்டதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நிலம் இருந்ததே எனக்கு தெரியாது.

2. வாதி மேற்படி கிராமத்தில் நிலங்கள் உள்ளதை பொறுத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி உண்மையான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதால் தான் நான் மேற்படி வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-30 உயில் ஆவணம் எந்த சொத்திற்காக எழுதி வைக்கப்பட்டது என்றால் 18ம் நம்பர் வீட்டிற்காக எழுதி வைக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.30ன் தாய் பத்திரம் யார் வசம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.30ன் தாய் பத்திரம் யாரிடம் இருந்து எப்பொழுது வாங்கப்பட்டது என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ.30ன் கண்ட சொத்தானது பூர்விக சொத்தின் வருமானத்தை கொண்டு எனது தாயார் பாப்பம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது சொத்து என்றால் சரியல்ல.

3. மேற்படி சொத்தில் வாதி, பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்பதால் அதனை பொறுத்து பாப்பம்மாள் உயில் எழுதி வைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.30ன் ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.30 யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் எனது அம்மா பெயரில் வாங்கப்பட்டது. எத்தனை ரூபாய் பத்திரம் என்றால் தெரியாது. எந்ததேதியில் யாரிடம் வாங்கப்பட்டது என்று தெரியாது. மேற்படி உயிலை யார் எழுதினார் என்று தெரியாது. பத்திரம் எந்ததேதியில் வாங்கப்பட்டது, உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. உயிலில் உள்ள சங்கதிகளை யார் சொன்னார்கள் என்றால் எனது அம்மா தான் சொன்னார். மேற்படி உயிலில் நானும் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் கையெழுத்து செய்துள்ளேன் ( சாட்சி தற்பொழுது மேற்படி உயிலில் கையெழுத்து செய்யவில்லை என கூறுகிறார்). உயில் எழுதிய அன்றே உயிலையும் சொத்தையும் கொடுத்துவிட்டார்களா என்றால் எல்லாவற்றையும் மொத்தமாக அன்றே கொடுத்துவிட்டார்கள். அவ்வாறு கொடுத்ததில் இருந்து மேற்படி நான் தான் சொத்தை அனுபவம் செய்தேன் என்றால் எனது அம்மாவும் சேர்ந்து தான் அனுபவம் செய்துவந்தார். மேற்படி சொத்துக்களுக்கு எனது பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்றால் இல்லை.

4. மேற்படி உயிலில் கண்டுள்ள சாட்சிகளை நான் அழைத்து வந்தேனா என்றால் எனது அம்மா அழைத்து வந்தார். இந்த வழக்கை எனது அண்ணன் தான் நடத்தி வருகிறார். நானும் எனது வழக்கை நடத்துவதற்கு அண்ணனிடம் ஒப்படைத்து விட்டேன் என்றால் ஆமாம். எனது அண்ணன் அழைத்து நான் வரவில்லை, சம்மன் வந்ததன் பேரில் வந்தேன். எனது அண்ணன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனது தங்கை போட்ட வழக்கிற்கு எதிர்த்து வழக்கு நடத்தி வருகிறார். எனது தாயார், எனது

அண்ணனுக்கும் எனக்கும் எழுதிக்கொடுத்தது போன்று எனது தங்கைக்கு சொத்து எதுவும் எழுதிக்கொடுத்தாரா என்றால் இடம் வாங்கி, வீடு கட்டி கொடுத்துள்ளார். எனது அம்மா எனது தங்கைக்கு எந்தவித இடம் வாங்கி வீடு கட்டி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான்., எனது அண்ணன், எனது அம்மா ஆகியோர்கள் சேர்ந்து பொய்யாக உயிலை தாயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.31 செட்டில் மெண்ட் ஆவணமானது எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தெரியாது. பி.வா.சா.ஆ.31ல் கண்டுள்ள சொத்து எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று தெரியாது.

5. மேற்படி பி.வா.சா.ஆ.31-ல் யாருயாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் 15 நம்பர் எனது அண்ணனுக்கும், 14 நம்பர் எனது அக்கா தனம் என்கின்ற தனலட்சமிக்கும், அரவிக்குளத்தில் உள்ள வீடு சீனி மகன் நடராஜ் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது (சாட்சி தற்பொழுது செட்டில் மெண்ட் ஆவணத்தில் ஒதுக்கப்படவில்லை என கூறுகிறார்). மேற்படி பி.வா.சா.ஆ.31 ஆவணத்தை எழுதி வைக்க எது அம்மாவிற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.31 சொத்தானது பொது குடும்ப சொத்து என்பதால் மொத்த பாகஸ்தர்களுக்கும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.31ன் எனக்கும், எனது அண்ணனுக்கும் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு பங்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் சூழ்ச்சி செய்து ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.